**<u>சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**<u>OS.No.160/2023</u>**

தேதி: 23.07.2026

பெயர் : சாந்தி (வா.சா.1)        க/பெ: அசோக்குமார்

**<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

1. நான் இந்த வழக்கை பாகபிரிவினைக்காக தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தில் கூட்டு அனுபவத்தில் உள்ளேன் என போட்டுள்ளேனா அல்லது இல்லை என போட்டுள்ளேனா என்றால் சொத்தை பிரித்து கொடுக்க வேண்டும் என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா A அட்டவணை சொத்தில் வீட்டு சொத்தை பொறுத்து 1972 பாகபத்திரத்தில் சொல்லியுள்ள அளவுகள் மற்றும் நான்கு எல்லைகள் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா அல்லது பட்டா அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டாவில் சொன்ன அளவை வைத்து போட்டுள்ளேன். பட்டாவில் அளவுகள் குறிப்பிடமாட்டார்கள் ஏர்ஸ் மட்டுமே குறிப்பிடுவார்கள் எனவும் நான்கு எல்லைகள் குறிப்பிடமாட்டார்கள் எனவும் நான் சொல்லியுள்ள சொத்து விவரம் தவறு என்றால் சரியல்ல. தாவா A அட்டவணை சொத்து என் அப்பாவுக்கு 1972க்கு முன்பு ஏதேனும் பத்திரம் ஏற்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.3 பாகபத்திரம் நான் படித்து பார்த்துள்ளேன். வா.சா.ஆ.3 பாகபத்திரத்தில் 1971ல் தானபத்திரம் செய்துள்ளோம் அதில் பிரச்சனை ஏற்பட்டுள்ளதால் இந்த பத்திரம் எழுதியுள்ளோம் என குறிப்பிட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1974ம் வருடம் நான் பிறந்தேன். 2ம் பிரதிவாதி மகாலெட்சுமிக்கு எனக்கு என்ன வயது இருக்கும்போது திருமணமானது என்றால் எனக்கு 38 வயது இருக்கும்போது திருமணமானது. 2ம் பிரதிவாதிக்கும் என் கணவருக்கும் எந்த வருடம் திருமணமானது

என்றால் 2000ம் வருடத்தில் திருமணமானது. மேற்படி திருமணத்திற்கு 2ம் பிரதிவாதிக்கு எவ்வளவு பவுன் நகை போட்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கும் என் கணவருக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் 19.08.1998ல் நடந்தது. என்னுடைய வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் எனக்கு 19.09.1998ல் திருமணம் நடைபெற்றதாக கூறியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. எனக்கு திருமணமானதற்கு பின்பு 2ம் பிரதிவாதியை என் கணவர் திருமணம் செய்து கொண்டார் என நான் மேற்படி சாட்சியத்தில் கூறியுள்ளது தவறு என்றால் சரிதான்.

**நீதிமன்ற கேள்வி** - திருமணம் எனக்கா அல்லது சகோதரிக்கா யாருக்கு முதலில் நடந்தது என்றால் என் சகோதரிக்கு முதலில் நடந்தது அதன் பிறகு எனக்கு நடந்தது.

2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக 04.08.2026 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.

/ உண்மை நகல்/

(ஒப்பம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்.